Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

| | |
|---|---|
| Case Number | **STC.No.212/2022** |
| Deposition of | PW.1 |
| Name | : முரளி |
| Father's Name/Husband Name | : கணபதி |
| Village | : அண்ணாமலைஅள்ளி |
| Taluk | : பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Religion | : Hindu |
| Age | : 48 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **12.03.2026**

**எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை**

நானும் எதிரியும் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பிருந்து 3 வருடங்களாக நண்பர்களா பழகி வந்தோம்.

நான் விவசாயம் செய்துக்கொண்டு JCB வைத்து தொழில் செய்து வருகிறேன்.

எதிரி கிரைனெட் தொழில்சாலை வைத்து தொழில் செய்து வருகிறார்.

எதிரியின் ஊருக்கும் என்னுடைய ஊருக்கும் இடையே 8 கி.மீ தூரம் இருக்கும்.

08.06.2021 ம் தேதி எதிரியின் கிரைனெட் தொழில்சாலையில் நான் JCB ஓட்டிக்கொண்டிருந்தபோது எதிரி தொழில் செய்வதற்காக ரூ.9 லட்சம் ரூபாய் கடனாக என்னிடம் கேட்டார்.

எதிரி என்னிடம் பணம் கேட்டுக்கும்போது நான் மட்டும்தான் இருந்தேன்.

எதிரி என்னிடம் பணம் கேட்டபோது ஒரு மாதம் கழித்து கொடுப்பதாக கூறினேன்.

எதிரி பிரியங்கா கிரைனெட்ஸ் என்ற பெயரில் தொழில் செய்வதற்கான ஆதாரங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

நான் எதிரிக்கு 10.07.2021 ம் தேதி பணம் கொடுத்தேன்.

10.07.2021 ம் தேதி மதியம் 12 மணியளவில் எதிரியின் அலுவலகத்தில் வைத்து நான் பணம் கொடுத்தேன். பணம் கொடுக்கும்போது அருகில் யாருமில்லை, வேலையாட்கள் மட்டும் வெளியில் இருந்தார்கள்.

நான் பணமாகதான் எதிரியிடம் கொடுத்தேன்.

100 ரூபாய் நோட்டுகள் 4 லட்சம் ரூபாய் மற்றும் 500 ரூபாய் நோட்டுகள் 5 லட்சம் கொடுத்தேன்.

நான் எதிரிக்கு பணம் கொடுக்கும்போது எந்தவிதமான ஆவணங்களையும் எதிரியிடமிருந்து எழுதி பெறவில்லை என்றால் சரிதான்.

நான் சொல்வதுபோல் பணம் எதுவும் எதிரிக்கு கொடுக்கவில்லை என்றாலும், பணம் கொடுக்கவில்லை என்பதால்தான் ஆவணங்கள் எதுவும் எழுதி பெறவில்லை என்றாலும் சரியல்ல.

எதிரி நான் பணம் கொடுப்பதற்கு ஒரு மாதம் முன்னிட்டே என்னிடம் எதிரி பணம் கேட்ட சங்கதிகளை எனது பிரமாண வாக்குமூலம் மற்றும் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

**எதிரி தரப்பு வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி.**